**ORIGINAL ARTICLE**

# கஷ்வியின் ஓவியத்தில் காணப்படும் குறியியல் ஓர் ஆய்வு

**[KASHVIYIN OOVIYATTIL KAANAPPADUM KURIYIYAL OOR AAYVU]**

# SEMIOTIC ANALYSIS IN THE SHORT STORY ILLUSTRATIONS OF KASHVI

**ஆ. நாகஜோதி [1] / A. Nagagothi [1]**
**கு. முனீஸ்வரன் [2] / K. Muniisvaran [2]**

[1]சுல்தான் இட்ரிஸ் கல்வியியல் பல்கலைக்கழகம், மலேசியா. ⁄ Sultan Idris Education University, Malaysia. மின்னஞ்சல் / Email: kajohaka4@gmail.com
[2]சுல்தான் இட்ரிஸ் கல்வியியல் பல்கலைக்கழகம், மலேசியா. ⁄ Sultan Idris Education University, Malaysia. மின்னஞ்சல் / Email: muniisvaran@fbk.upsi.edu.my

DOI: https://doi.org/10.33306/mjssh/53

**ஆய்வுச் சாரம்**

சிறுகதைகளுக்கு வரையப்படும் ஓவியங்கள் பல செய்திகளை வாசகர்களுக்குச் சொல்கின்றன. ஆகவே, வாசகர்களை ஈர்ப்பதற்கே கதைகளும் அதனோடு பல ஓவியங்களும் எழுத்துப்படிவங்களில் வரையப்படுகின்றன. இதற்கிடையில், சிறுகதையின் பாத்திரங்களைக் கோடுகள் கொண்ட ஓவியத்தைப் பயன்படுத்தி செயலாக்கப்பட வேண்டியது ஓர் ஓவியரின் இலக்காகும். இந்த ஆய்வின் நோக்கமானது, ஓவியர் கஷ்வி சிறுகதைக்கு வரைந்த ஓவியங்களை அடையாளங்கண்டு அவை உணர்த்தும் செய்திகளை அல்லது பொருளைக் குறியியல் (Semiotics) எனும் கோட்பாட்டியல் மூலம் விளக்குவதாகும். ஓவியத்தில் காணப்படும் குறிகளும் (signs) அவை தொடர்பான பொருளும் (meaning) எவ்வாறு கடத்தப்படுகின்றன என்பதை அடிப்படையாக வைத்து இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது. விளக்க அட்டவணையைத் துணையாகக் கொண்டு ஓவியத்தின் குறியீடுகள் விளக்கப்படுகிறது. எனவே, 2019ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் மலேசிய நண்பன் ஞாயிறு பதிப்புச் செய்தித்தாளில் வெளியான ஒரு சிறுகதைக்கு, கஷ்வி எனும் ஓவியரால் வரையப்பட்ட ஓவியத்தைத் தேர்ந்தெடுத்து, பின் குறியியல் கோட்பாடின் மூலம் குறிகளும் (signs) அக்குறிகளின் பொருளும் விளக்கப்பட்டன. இதன் மூலம் ஓர் ஓவியத்தின் பொருளை விவரமாகக் குறியீடுகளைக் கொண்டு அறிய முடிகிறது.

**கருச்சொற்கள்:** குறியியல், ஓவியம், சிறுகதை, கஷ்வி

**Abstract**

Sketches for short stories tell readers many messages. Paintings are painted in order to attract readers to the short story. In the meantime, the goal of a painter is to use a short sketch with striped lines. The purpose of this study is to identify the paintings of the painter Kashivi's for short stories and to interpret them with Semiotics theorems. This is done based on how the signs and meaning of the painting are transmitted. The symbols of the sketch are illustrated via charts. Short story published in the 'Malaysian Nanban' Sunday Edition newspaper in January 2019 that sketched by Kashivi was selected and then the meaning of the signs and symbols was explained with semiotic theory. This enables to identify the meaning of a painting in detail.

**Keywords:** Semiotic, illustration, short story, Kashvi

This article is licensed under a Creative Commons Attribution-Non Commercial 4.0 International License

Received 3rd July 2019, revised 18th August 2019, accepted 30th August 2019

## முன்னுரை

பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, ஓவியக்கலை வளர்ச்சியடைந்திருந்தது என்பதற்குச் சங்க நூல்களும் குகைகளின் தீட்டப்பட்ட பண்டைய ஓவியங்களுமே சான்றுகளாகும். தமிழர் வளர்த்த நுண்கலைகளின் வரிசையில் ஓவியக்கலை முன்னணியில் நிற்கிறது (வெங்கடசாமி, 2014)[1]. சிறுகதை என்னும் தனி இலக்கிய வகையில் தமிழில் கதைகள் அமைந்தது இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆகும் (வரதராசன். மு., 2010)[2]. அக்காலத்திலிருந்தே கதைகளில் ஓவியங்கள் பல கருத்துக்களை வாசகர்களுக்கு அளிப்பதில் முக்கிய அம்சமாக விளங்கின.

## ஓவியமும் சிறுகதையும்

உலகத்தில் காணப்படுகிற எல்லாப் பொருள்களின் உருவத்தையும் உலகத்தில் காணப்படாத கற்பனைப் பொருள்களையும் பலவித நிறங்களால் இயற்கையழகு பொருந்த எழுதப்படுகின்ற படங்களே ஓவியக்கலையாகும். வண்ணங்கள் தீட்டப்படாமல் வெறுங்கோடுகளாக வரையப்படும் ஓவியங்களைப் புனையா ஓவியம் என்பர். ஓவியம், கதையை வேறொருப் பரிமாணத்தில் சொல்லுகிறது. கதையின் உள்ளடக்கத்தை ஓவியங்கள் தெளிவுபடுத்துகின்றன;

காட்சிப்படுத்துகின்றன; மேலும் அழகுப்படுத்துகின்றன. பெரும்பாலான வாசகர்கள் படத்தோடு காணப்படும் கதைகளை வாசிக்க விரும்புவர் (முருகேஷ், 2015)[3]. ஆகவே, அக்கதையைப் வாசிக்கத் தூண்டக் கூடியது ஓவியத்தில் காணப்படும் குறியீடுகளே ஆகும். பெரும்பாலான வாசகர்கள் முதலில் ஓவியத்தில் உள்ள குறியீடுகளைக் காண்கிறார்கள். வாசகர்கள் ஒவியத்தில் குறியீடுகள் விளக்கக் கூடிய செய்தியைக் கற்பனைச் செய்து கதையை வாசிக்கத் தொடங்குகிறார்கள்.

**குறியியல் கோட்பாட்டின் அடிப்படையில் சிறுகதை ஓவியம்**

குறியியல் (Semiotics) என்பது குறிகளைப் பற்றித் தனியாகவும், குறி முறைமைகளில் கூட்டாகவும் ஆய்வு செய்யும் துறையாகும். இதனை முதலில் ஆய்வு செய்தவர் Pierce (1839-1914) ஆவார். Pierce குறிகளை (signs) அவை தொடர்பான பொருளை (meaning) எவ்வாறு கடத்துகின்றன என்பதை அடிப்படையாக வைத்து வகைப்படுத்தியுள்ளார். இக்கோட்பாட்டியலில் குறிகளின் பொருள் எவ்வாறு கடத்தப்பட்டு விளங்கிக் கொள்ளப்படுகிறது என்ற ஆய்வையும் உள்ளடக்கியுள்ளார். இந்தக் குறிகளின் பொருள் விளக்கக்கூடிய வழிமுறையானது, தனிச் சத்தங்கள், அல்லது சொற்களை உருவாக்கப் பயன்படும் எழுத்துக்கள், உணர்வுகளை அல்லது மனப்போக்கை வெளிப்படுத்தும் உடலசைவுகள், சில சமயங்களில் உடுத்தும் உடை போன்றவை குறியீடுகள் (codes) என்பதாகும்.

Dyer (1982)[4] இக்குறியியலை மேலும் விரிவாக்கம் செய்துள்ளார். இவரின் விவரக்குறிப்புக் கோட்பாட்டியல் மூலம் காட்டிகளை நான்கு குறியீடுகளைக் கொண்டு விவரமாக விளக்கியுள்ளார். அக்குறியீடுகளானது, புறத்தோற்றம், உணர்ச்சிக் குறிப்பு, உடலசைவு மற்றும் சூழலமைவு போன்ற அடிப்படைக் கூறுகளை உள்ளடக்கியுள்ளது. ஓவியத்தின் குறியீடுகளின் ஒவ்வொரு அம்சங்களுக்கும், பலவகையான உட்பொருள்களைக் கொடுக்கும் வல்லமைக் கொண்டுள்ளது.

பெரும்பாலான ஓவியங்கள் மக்களின் கவனத்தை ஈர்க்கவே அச்சு ஊடகங்களில் வெளியிடப்படுறது. வழக்கமாக, வாசகர்கள் ஓவியத்தை மேலோட்டமாக பார்த்துப் பின் கதையை வாசிக்கிறார்கள். ஆகையால் யாரும் ஒவியத்தை ஆழமாக ஆராய்வதில்லை என்கிறார் Dyer (2009)[5]. ஆனால், அவரது கூற்றின்படி வரையப்பட்ட ஒவ்வொரு ஓவியத்தின் ஆழமான கூறுகளை ஆராய்வது முக்கியமானதாகக் கருதப்படுகிறது. சிறுகதையின் கருப்பொருளை மையமாகக் கொண்டு வரையப்படும் ஓவியம் கதைமாந்தர்களின் புறத்தோற்றம், உணர்ச்சிக் குறிப்பு, உடலசைவு மற்றும் சூழலலமைவைக் கருத்தில் கொண்டு வரையப்பட வேண்டும் என்பது ஓவியரின் கட்டமைப்பாகும்.

இவ்வாய்வில் ஆய்வாளர் மலேசிய நண்பன் நாளிதழில் வெளிவரும் சிறுகதைக்கான ஓவியர் கஷ்வியின் ஓவியத்தைத் தேர்ந்தெடுத்து ஆராயந்துள்ளார். ரெங்கசாமி, ம. (2019)[6]. எழுதிய *உறுதியான முடிவு* எனும் சிறுகதையே இவ்வாய்வுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டது. ஆகவே Dyer (1982)[4] என்பவரின் குறியியல் கோட்பாட்டின் மூலம், இச்சிறுகதைக்கான ஓவியத்தில் காணப்படும் புறத்தோற்றம், உணர்ச்சிக் குறி, உடலசைவு மற்றும் சூழலமைவு எனும் குறியீடுகளும் அதன் பொருள்களும் ஆராயப்பட்டன. கீழே அட்டவணையில் அதைக் காணலாம்:

அட்டவணை 1

*குறியியல் கோட்பாடியல்: டேயரின் விவரக்குறிப்பு மூலம் சிறுகதையில் வெளியிட்ட ஓவியத்தின் குறியீடுகளும் அதன் விளக்கமும்.*

| குறியியல் கோட்பாட்டியல்<br>டேயர் குறியியல் விரிவாக்கம் (Dyer, 1982)<br>விவரக்குறியீடுகள் | | | |
|---|---|---|---|
| ஓவியம் 1 : சிறுகதை ( உறுதியான முடிவு / 13.1.2019 ) | | | |
| தேயர் குறியியல் விரிவாக்கம் (Dyer, 1982) | குறியீடு கோட்பாட்டியல் | | |
| விவரக்குறியீடுகள் | **பிரதிநிதித்துவம்** | **பொருள்** | **விளக்கம்** |
| புறத்தோற்றம் | வயது | 30 -40 நடுத்தர வயது தம்பதியர்<br>60 வயது முதியவர்<br>7 வயது ஒரு சிறுவன் | கணவன் மனைவி மற்றும் தங்களின் ஓர் ஆண் மகனையும் பிரதிபலிக்கின்றது. மேலும் ஒரு முதியவரையும் காண்பிக்கின்றது. |
| | பால் | ஆண்கள் மற்றும் பெண். | |
| | இனம் | இந்தியர்கள் | மூவரின் உடல் வாகு சற்று பருமனாகவும் முதியவரின் உடல் சற்று மெலிந்தும் காணப்படுகிறது.<br>முகம், உடை முடி போன்றவை அனைத்தும் இவர்கள் ஓர் இந்தியக் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் என்பதனைக் |
| | முடி<br>உடல் வாகு | நேர் முடி<br>கொஞ்சம் பருத்த உடல்<br>ஒருவர் உடல் மெலிந்து | |

| | | | |
|---|---|---|---|
| | | | காட்டுகிறது. |
| உணச்சிக் குறி | முக பாவனை | இரண்டு பேர் முகம் கவலை<br><br>சிறு பையன்- மகிழ்ச்சி<br>முதியவரின் முகம் - ஏக்கம் | தம்பதியர்கள் இரண்டு பேர் வயதானவரை பாசத்தோடும் மன மகிழ்ச்சியோடும் பார்க்கும் சிறுவனைக் காண்கிறார்கள். அவர்கள் முகத்தில் கவலையும், எதிர்ப்பார்ப்பும் தெரிகிறது. சிறுவனைக் கண்ட முதியவர் மகிழ்ச்சியடைகிறார். |
| | நோக்குதல் | சிறு பையன் நின்றவாறு வயதானவரை நோக்குதல் | |
| | பாணி | முதியவர் படுத்துக்கொண்டு சிறு பையனை நோக்குதல்<br><br>தம்பதியர் இருவரும் நின்றவாரு சிறு பையனை நோக்குகிறார்கள். | |
| உடலசைவு | உடலசைவுகள் | மூவர் நிற்றல்<br>ஒருவர் படுத்திருத்தல் | மூன்று பேர் நின்று கொண்டிருக்கிறார்கள். ஒரு முதியவர் கட்டிலில் படுத்திருக்கிறார். |
| சூழலமைவு | மருத்துவமனை | வீட்டின் வெளிப்புறம் | மருத்துவமனையின் சூழமைவைக் காட்டுகிறது. |

அட்டவணை 1, கணவன் மனைவி, சிறுவன் மற்றும் ஒரு முதியவரில் குறியீடுகளையும் அதன் விளக்கத்தையும் காட்டுகிறது. சிறுவன் அத்தம்பதியரின் மகனாவான். அம்முதியவர் அப்பெண்மணியின் தந்தையாவார். தந்தையின் உடல் நலக்குறைவினால் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கிறார். கதைப் பின்னனியில் அபெண்ணின் தந்தை தன் மகனை மலாய்ப் பள்ளியில் படிக்கவைத்திருக்கிறார். மகள் ஷாமளா தன் மகனையும் மலாய் பள்ளியில் சேர்க்க வேண்டுமென பிடிவாதமாக இருக்கிறாள். இதற்கிடையில் தமிழ்ப்பள்ளியில் படித்தவர்களின் சாதனைகளைக் கண்டு தமிழன் சாதிக்கப்பிறந்தவன் என உணர்ந்து, ஷாமளாவின் தந்தை தன் பிள்ளைகளைத் தமிழ்ப்பள்ளிக்கு அனுப்பாததை எண்ணி வருத்தப்படுகிறார். தான் செய்த தவற்றைத் தன் பிள்ளைகள் செய்யக்கூடாதென்று தன் உறுதியான எண்ணத்தை வெளிப்படுத்துகிறார். தன் எண்ணம் நிறைவேறுமா என்று எண்ணி மன அழுத்தத்திற்கு ஆளாகுகிறார். பிறகு நெஞ்சு வலி ஏற்படுகிறது; மருத்துவமனையில்

சேர்க்கப்படுகிறார். தன் பேரனாவது தமிழ்ப்பள்ளியில் சேர வேண்டும் என ஏக்கத்தோடு தன் பேரனின் முகத்தைத் தழுவுகிறார் அம்முதியவர். தந்தையின் ஆசையை நிறைவேற்றும் கட்டாயத்தில் இருக்கிறாள் ஷாமளா. இறுதியில் தன் தந்தையின் ஆசையை நிறைவேற்ற தன் மகனைத் தமிழ்ப்பள்ளியில் பதிவு செய்கிறாள். கதையின் முக்கியக் கருப்பொருள் தமிழ்ப்பள்ளியில் சேர்ப்பதில் உறுதியான முடிவை எடுத்திருப்பதைக் காட்டுகிறது. அம்முடிவு மருத்துவமனையில் இருக்கும் தன் தந்தையின் எதிர்ப்பார்ப்பை மையமாகக் கொண்டு இவ்வோவியம் வரையப்பட்டிருக்கிறது. கஷ்வியின் ஓவியத்தில் காணப்படும் கதைமாந்த்தர்களின் புறத்தோற்றம், உணர்ச்சி, உடலசைவு மற்றும் சூழமைவு ஏற்புடையாதாக அமைந்திருக்கிறது. முக்கியமாகக் கதைமாந்தர்களின் வடிவங்கள் வாசகரின் கவனத்தை ஈர்க்கிறது. இதனால், வாசகர்களுக்குச் சலிப்பைத் தராமல் கதை கூற வரும் மையக் கருத்தைத் தெரிந்து கொள்ள அக்கதையைப் படிக்கத் தூண்டுகிறது.

**முடிவுரை**

சிறுகதையைப் படித்துச் சுவைக்கும் முன் வாசகர் மனதில் சுவைபடச் செய்வது ஓவியம். வாசகரின் கவனத்தையும் சிந்தனையைத் தூண்டும் வகையில் முறையான குறியீடுகளைக் கொண்டு வரையப்படும் ஓவியங்கள் சிறுகதையின் கருப்பொருளைக் காட்டுகிறது. வாசகர்களின் சிந்தனையிலும் உணர்விலும் தாக்கத்தை ஏற்படுத்தி படிக்க ஆர்வத்தைத் தூண்டுகிறது. Dyer-இன் விவரக் குறியீடான புறத்தோற்றம், உணர்ச்சி, உடலசைவு மற்றும் சூழலமைவு ஓர் ஓவியத்தில் முக்கிய அம்சமாக விளங்குகிறது. ஆகவே, ஒரு சிறுகதையைப் படிப்பதற்கு முன் அதற்காக வரையப்பட்ட ஓவியம் அதன் குறியீடுகள் வாசகர்களின் பார்வையை முதலில் கவர்ந்திழுக்கிறது. குறியியல் கோட்பாட்டியல் ஓர் ஓவியத்தில் பெரும் பங்கினை ஆற்றுகின்றது என்பதனை இவ்வாய்வின் மூலம் காணலாம்.

**துணைநூற்பட்டியல் :**

1. Venkatasamy, M. S. (2014). *Fine arts (நுண்கலை).* Chennai: Naam Tamilar Publications.
2. Varatharasan, M. (2010). *History of Tamil literature (தமிழ் இலக்கிய வரலாறு).* New Dehli: Sahitya Academy.
3. Murukesh, M. (2015). *Faces: Stories said by paintings (முகங்கள்: கதை சொல்லும் ஓவியங்கள்).* Chennai: Hindu Tamil Direction.
4. Dyer, Gillian. (1982). *Advertising communication*. New York: Rutledge.
5. Dyer. Gillian. (2009). *Advertising as communication*. London: Taylor & Francis eLibrary.
6. Rengasamy, M. (2019). *Firm Decisions (உறுதியான முடிவு).* Malaysia Nanban, Sunday Edition. p. S4.